ஓம்

நற் சிந்தனை 009 - சமய சாரம் 1

இன்று சமய தத்துவ சாரத்தில் சில துளிகளைக் கிரகிக்க முயல்வோம்.

எல்லாச் சமயங்களினதும்; குறிப்பாக சைவ சமயத்தின் தத்துவத்தை ஒரே ஒரு சொல்லில் அடக்கலாம் - பரம்பொருள் அவ்வளவுதான்.
இரண்டே இரண்டு சொற்களுள் ஒடுக்கலாம் - சிவம்; சக்தி - அவ்வளவுதான்.
மூன்றே மூன்று சொற்கள் - பதி; பசு; பாசம் - அவ்வளவுதான்.
ஐந்தே ஐந்து சொற்கள் - ஆணவம்; கர்மம்; மாயை; நாதம்; விந்து - அவ்வளவேதான்.
இவற்றை விரித்தால் ஆறாறு; முப்பத்தாறு காண்டங்கள் (வேடங்கள்): அஃதாவது தோற்றமும் ஒடுக்கமும் உள்ள தன்மை. (Principles, Processes & Elements). That's it - that's all the essence of the Religious Philosophy.

இதற்கு மேற்பட்ட தத்துவங்களில் நம் மூளையைப் போட்டுக் கலக்காமல்; சும்மா காதால் வெறுமனே கேட்டு வைப்போம்.
அடிக்க அடிக்க அம்மியும் நகரும்.
மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருக்கிப் பாயும்.
சித்தர்களின் பொக்குஷப் புதையலாம் சேற்றை எடுத்து எறிகையில்; சுவரில் ஒட்டுவன ஒட்டட்டுமே.

தோற்றமும் ஒடுக்கமும் உள்ள தன்மை; காண்டம் அல்லது வேடம் அல்லது சிவ தாண்டவம்; எப்படியும் நாம் எடுத்துக் கொள்ளலாம். அவை 36 எனக் கண்டோம். அந்த 36 ஐயும் 3 பெரும் பிரிவுகளாகப் பிரித்து இறை காண்டம்; போக காண்டம்; ஆத்ம காண்டம் என்போம்.

இறை காண்டம் 5: போக காண்டம் 7: ஆத்ம காண்டம் 24. ஆக 36.
இறை காண்டங்கள் 5 ம் :- சிவ காண்டம்; சக்தி காண்டம்; சதாசிவ காண்டம்; மகேசுவர காண்டம்; தர்ம காண்டம்.
போக காண்டங்கள் 7ஆவன :- மாயை; காலம்; நியதி; கலை; வித்தை; பற்று; ஆன்மா.
ஆத்ம காண்டங்கள் 24 ஐயும் 5 பிரிவுகளாகப் பார்பது சுலபம்: அவை அந்தக்கரணங்கள்; புலன்கள்; கர்மேந்திரியங்கள்; ஞானேந்திரியங்கள்; பூதங்கள்.
அந்தக்கரணங்கள்-4; புலன்கள்-5; கர்மேந்திரியங்கள்-5; ஞானேந்திரியங்கள்-5; பூதங்கள்-5; ஆக 24.
அந்தக்கரணங்கள் 4 ம் - சித்தம்; புத்தி; அகங்காரம்; மனம்.
புலன்கள் 5 ஆவன - செவி; தோல்; கண்; நாவு; நாசி.

கர்மேந்திரியங்கள் 5 ம் - சொல்லல்; நடத்தல்; கொடுத்தல்; கழித்தல்; காமுறல்.
ஞானேந்திரியங்கள் 5 - சுவை; ஒளி; ஊறு; ஓசை; நாற்றம்.
பூதங்கள் 5 எனப்படுவது - மண்; நீர்; தீ; வளி; விண்.

சமய தத்துவத்தில் உள்ள 36 காண்டங்களும் இவ்வளவுதான். இவற்றை முதன் முதலிற் கேட்கையில் கொஞ்சம் தலையைச் சுற்றத்தான் செய்கிறது. ஒரு பெரு மூச்சு எடுத்துவிட்டு; திரும்பவும் இரு முறை அமைதியாகப் படித்தோமானால்; நமக்குத் தெரியாத புதியனவேதும்; புதுமையேதுமே இங்கு இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போற் தெளிவாகும்!
இப்பொழுது சில தத்துவச் சொற்களைப் பார்ப்போம்:
பிரபஞ்சம்
பிரபஞ்சத்தின் இரு பிரிவுகள் - அகம்; புறம். புறத்தே பரந்து வியாபித்திருக்கும் பரமாகாயத்தோடு கிரகங்கள்; எண் இறந்து எல்லை இல்லா நட்சத்திர மண்டலங்கள்; வால்வெள்ளிகள்; இருப்பது போல்; அகத்தேயும் - ஆம் நம் அகத்தேயுள்ள வெட்ட வெளியிலும் கணக்கற்ற பரிணாமங்கள் குவிந்து கிடக்கின்றன. அவற்றிற் சிறு துளியே நம் எண்ணங்களும் உணர்வுகளும். நாம் பிறந்த நாட் தொட்டு இன்று வரை நம் மனதிற் தோன்றிய கோடா கோடி சிந்தனைகளும் அனுபவங்களும் இந்த அகப் பிரபஞ்சத்தின் சிறு பொறிகள் மட்டுமே. அதற்கும் மேலாக ஏழேழு உலகங்களில் எண்ணற்ற பிறவிகளிலும் ஏற்பட்ட பொறிகள் காய்ந்து படிந்த கரிகளாகவும்; பறந்து திரியும் தூசு களாகவும் அக உலகுட் தொடர்கின்றன. அந்தப் பயங்கரப் பேச்சை இவ்வளவோடு இப்போதைக்கு நிறுத்தி; பிரபஞ்ச தத்துவத்தைப் பின் ஒரு முறை கவனிப்போம். மறு படியும் சமய மொழியைத் தொடருவோம்.

உலகங்கள் 3 - கதைகளிலும் புராணங்களிலும்; பூவுலகம் பாதாளம் தேவுலகம் நரகம் சுவர்க்கம் என்றெல்லாம் வரும். ஆயின் தத்துவத்தில்
மண்ணுலகம்; விண்ணுலகம்; நுண்ணுலகம் என்போம்.
மண்ணுலகம் - உருவம்; விண்ணுலகம் - அருவம்; நுண்ணுலகம் - அருவுருவம்
மண்ணுலகம் - உருவம்- பிரகிருதி - ஊனக்கண்ணுக்கு புலப்படுவன தெரியாதன எல்லாப் பொருட்களும் அவ்வுலகுள் அடங்கும்.
நுண்ணுலகம் - அருவுருவம்- சூட்சும உடலினர்; அந்தராத்மாக்கள்; தேவதூதர்; தேவதைகள்; பிதிரர்; கணங்கள் வாழும் உலகு. ஆவிகள்; பேய்கள்; பிசாசுகள்; அசுரர் அரக்கர் இராட்சதர்; இவ்வுலகின் கீட் பகுதியிற் சஞ்சரிப்பதாகக் கூறுவர்.
விண்ணுலகம் - அருவம் - சிவசக்தி; தெய்வீக உறைவிடம்; பரிணாமமற்ற உலகு

முக்குணங்கள் ஆவன - சாத்துவிதம்; இராசதம்; தாமதம் (வடமொழி மருவல்)
சாத்துவிதம் என்பது பரிசுத்தம் - மிகச் சுத்தமான குணம்.
இராசதம் என்றால் ஆர்வம் - காயத்தை - இவ்வுடலைச் செயலில் ஈர்க்கும் ஆர்வம்.
தாமத குணம் மேற் சொன்னதற்கு மாறான மந்தம் - மந்த குணம்.

சிவசக்தி பிரகிருதியாகத் தோன்றுகையில் மூவகையாக மலர்ந்தருளும்.
அவை நாம் அறிந்த - இச்சா சக்தி; கிரியா சக்தி; ஞான சக்தி ஆகும்.
இச்சா சக்தி - தெரிந்ததே; கிரியா சக்தி - செயல்; ஞான சக்தி- அறிவு.

இனிக் கொஞ்சம் கடினமானவை சில:
பூரணம்; பரிபூரணம் - குறைவற்ற நிறைவும் - நிறைவற்ற நிறைவும்!
சூன்யம் - ஒன்றும் இல்லாத பெட்டியுள் இருக்கும் வெறுமை வேறு;
பத்திலிருந்து பத்தைக் கழித்ததும் வரும் பூஜ்யம் வேறு. "சும்மா இரு";
"வெட்ட வெளியில் ஒளியைக் கண்டேன்." எனக் குருநாதர் கூறுவதும் வேறு.
சைவர் - ஆதி - அந்தம் - அநாதி - அனைத்தும் - உள் நின்றால் வெளியும்; வெளி நின்றால் உள்ளும் ஆன ஒரே எல்லை சைவர்!

ஒரு முறை சைவத்தின் உச்சத்தை இரு சித்தர் சொல்லக் கேட்போம்;

| | |
|---|---|
| சித்திலே சிவமொ டுங்கச் | மற்றுப்பற்றை நீக்கு |
| சிவத்திலே சித்தொ டுங்க | கருவழியைக் கட |
| வுய்த்தவிவ் விரண்டு மற்ற | சும்மா இரு |
| வுண்மையே வுண்மை........ | வெளியிலே ஒளிகாண் |

இவை எல்லாம் சிந்திக்கச் சிந்திக்க; ஆழ்ந்து சிந்திக்க; சிந்தனைக்கு விருந்தாகும்; சித்தம் தெளிவாகும்; உள் ஒளி பெருகும்; உலப்பிலா ஆனந்தம் ஊறும்.

ஓம்